## பேராதனை பல்கலைக்கழகம் - 2013

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5), 108 மற்றும் 111 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1)ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) உப பிரிவின் பிரகாரம், நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமையின் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வினை அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை தீர்மானிக்க என்னால் முடியாதுள்ளேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட முக்கியமான விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினுள் ரூபா 4,928,578 கூட்டுத்தொகையான மீண்டுவரும் செலவினம், மூலதன ஏற்பாட்டின் மூலமும், ரூபா 1,065,332 தொகையான மூலதனச் செலவினம் மீண்டுவரும் செலவின ஏற்பாட்டின் மூலமும் செலவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) முன் அங்கீகாரம் இல்லாமல் 28 ஆராய்ச்சி நிதியங்கள் மற்றும் 11 ஏனைய நிதியங்கள் என்பவற்றின் ஏற்பாட்டை விஞ்சி முறையே ரூபா 3,321,486 தொகை மற்றும் ரூபா 2,210,359.08 தொகையான செலவினங்களும், ஏற்பாடு இல்லாமல் 12 ஆராய்ச்சிகள் மற்றும் 02 ஏனைய நிதியங்களிற்காக ரூபா 360,508 கூட்டுத்தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இந்நிதியங்களில் மறை மீதிகள், நேர் மீதிகளுடன் இணக்கம் செய்யப்பட்டு நிதி நிலைமைக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டில் தொலைக்கல்வி மற்றும் தொடர் கல்வி நிலையத்தின் ரூபா 71,224,806 தொகையான செலவினங்கள் நிதிக்கூற்றுக்களில் ரூபா 65,538,406 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் மொத்த செலவினம் ரூபா 5,686,400 ஆல் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) தொலைக்கல்வி மற்றும் தொடர் கல்வி நிலையத்திடமுள்ள ரூபா 4,928,561 கூட்டுத்தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியில் ரூபா 1,468,164 பெறுமதியான சொத்துக்களுக்குரிய பெறுமானத்தேய்வு அளவு நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(உ) தொலைக்கல்வி மற்றும் தொடர் கல்வி நிலையத்தின் கைதவிர்த்தல் செயற்பாட்டின் மூலம் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட ரூபா 2,038,387 தொகையான நானாவித நிலையான சொத்துக்களின் பெறுமதி புத்தகங்களிலிருந்து அகற்றப்படாமல் நீண்டகாலமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டமையால் சொத்துக்களின் தேறிய பெறுமதி அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) தகவல் தொழில்நுட்ப நிலையத்திற்குரிய ரூபா 417,034 தொகையான 1913 பயிற்சி கைநூல்கள் மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றுக்களில் இறுதி இருப்பின் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் போது தகவல் தொழில்நுட்ப நிலையத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,950,000 தொகையான கணனி இயந்திரங்களின் கிரயப் பெறுமதி மற்றும் அதற்கான மீளாய்வாண்டின் ரூபா 675,370 தொகையான பெறுமானத் தேய்வு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) முன்னைய ஆண்டிற்குரித்தாக தகவல் தொழில்நுட்ப நிலையத்தில் நடாத்தப்பட்ட 16 செயலமர்வுகள் மற்றும் பாடநெறிகளுக்கு கிடைக்க வேண்டிய ரூபா 642,271 கூட்டுத்தொகையான பாடநெறிக் கட்டணங்கள் அங்கீகாரமொன்றில்லாமல் பொது ஒதுக்கத்திலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஐ) நிதிக்கூற்றுக்களில் ஆராய்ச்சி மானியங்கள் பட்டோலையின் கணக்கு இலக்கம் 1301071201 இன் கீழ் ரூபா 169,895 தொகையான மறை மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், பிரதான பேரேட்டுக் கணக்கில் அவ்வாறான மீதியொன்று காணப்படவில்லை.

(ஓ) மீளாய்வாண்டினுள் தேசிய விஞ்ஞான மன்றத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த ரூபா 907,424 பெறுமதியான உபகரணங்கள் மற்றும் மருத்துவ பீடத்திற்குரிய ரூபா 272,067 ஆன பொருட்கள் என்பன மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஓ) நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக திறைசேரியிடமிருந்து கிடைத்த நிதிஏற்பாட்டை மிகைத்து ரூபா 104,221,372 தொகை செலவு செய்ததன் காரணமாக ஏற்பட்டிருந்த மறைப் பெறுமதிகள் நேர்பெறுமதியுடன் இணக்கம் செய்யப்பட்டு தேறிய விளைவு மாத்திரம் நிதி நிலைமைக் கூற்றில் செலவு செய்யப்படாத மூலதன மானியத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டில் ரூபா 37,225,638 கூட்டுத்தொகையான வெளிநாட்டு மாணவர் வருமானம், வருமானக் கூற்றில் ரூபா 36,970,240 ஆக காண்பிக்கப்பட்ட காரணத்தால் வெளிநாட்டு மாணவர் வருமானம் ரூபா 255,398 ஆல் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(க்) 2005 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை காணப்பட்ட வகைப்படுத்தப்படாத மற்றும் அலகுப் பெறுமதி இனங்காணப்படாத ரூபா 13,168,099 கூட்டுத்தொகையான இருப்புச் சீராக்கக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட மீதியை தீர்வு செய்வதற்காக வருமானம் மற்றும் செலவினங்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் வருமானமொன்றாக செலவு வைக்கப்பட்டிருந்தது.

(க) மீளாய்வாண்டில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருந்த கலை பீடத்தின் ரூபா 1,747,318 தொகையான 02 ஒப்பந்தங்களின் பெறுமதியை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) மிருக வைத்திய பீடத்தின் போதனா வைத்தியசாலையின் நிர்மாண ஒப்பந்தத்திற்காக ரூபா 44,000,000 தொகைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்ததுடன், வேலை பூர்த்தி செய்யப்பட்டு மூலதனமாக்கும் போது ரூபா 45,471,987 தொகை மூலதனமாக்கப்பட்டதன் காரணமாக ரூபா 1,471,987 தொகை கூடுதலாக மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(கி) உடன்படிக்கை மீறிய 122 விரிவுரையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 153,137,696 தொகையான மீதியை ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கீ) கண்டி கங்கவட்ட கோரளை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான ஆதனங்களுக்காக 1997 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய ரூபா 1,034,839 கூட்டுத்தொகையான வீதவரித் தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(கு) 2007 / 2008 ஆம் கல்வியாண்டின் மாணவர்களின் கற்கை காலம் 2012 ஆம் ஆண்டுடன் முடிவடைவதுடன், அவ்வாண்டிற்குரிய 09 மாணவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 5,850,000 தொகை மீளாய்வாண்டின் பெறவேண்டிய வருமானமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(கூ) பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 1390 ஏக்கர் 02 ரூட் 21.6 பேர்ச் காணியும் 03 மாணவ விடுதிகளும் “ சீ ” வகையிலான 03 வீடுகளும் மதிப்பீடு செய்யப்பட்டு அப்பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கெ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அட்டுறு செலவினம் குறிப்பாக இங்காணப்பட்டு அதற்காக ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் குறித்த செலவினத்திற்காக இனங்காணப்படாமல் ரூபா 37,733,400 தொகை அட்டுறு செலவின மிகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமை அவானிக்கப்பட்டது.

(கே) பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டதன் பின்னர் பெறுமதி பூச்சியமாக உள்ள நிலையான சொத்துக்கள் மீண்டும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுமாயின் அச்சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், கொள்விலை ரூபா 1,666,744,282 தொகையான 04 நிலையான சொத்து உருப்படிகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கை) ரூபா 3,863,394 கூட்டுத்தொகையான ஆராய்ச்சி நிதிய மீதிகள் வருடக் கணக்காக முன்கொண்டு வரப்பட்ட மீதியாக இருந்ததுடன், அம்மீதிகளை தீர்வு செய்வதற்கோ அல்லது உரிய ஆராய்ச்சிகளுக்காக நிதியத்தை ஈடுபடுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

03 விடயங்களுக்குரிய ரூபா 71,653,182 கூட்டுத்தொகையான கணக்கு மீதிகள் அதற்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் கூட்டுத்தொகையான ரூபா 78,049,609 மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 6,396,427 தொகையான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 கிடைக்கப்பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள 36 வெளி நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,306,111 தொகையான மின்சாரச் செலவினங்களும் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக 07 நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 512,783 ஆன நீர்க் கட்டணங்களும் 2013 திசெம்பர் 31 வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்திற்குரிய உத்தியோகபூர்வ வீடுகளுக்காக ரூபா 1,026,154 கூட்டுத்தொகையான வாடகை குடியிருப்பாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள வெளிநிறுவனங்களிடமிருந்தும் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான காணியை குத்தகைக்கு வழங்கியதாலும் 07 நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 231,187 தொகையான குத்தகை வருமானம் மற்றும் பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள 03 நிறுவனங்களிடமிருந்து 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 119,145 கூட்டுத்தொகயான தொலைபேசிக் கட்டணங்களும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1980 – 2009 வரையான காலப்பகுதிக்குரித்தாக பல்கலைக்கழகத்தின் 08 பீடங்களுக்குரிய மாணவர்களிடமிருந்து பெறவேண்டிய பாடநெறிக் கட்டணங்கள் மற்றும் அதன் அடிப்படையில் விதிக்கப்பட்ட தண்டப்பணம் ரூபா 3,809,903 ஆன தொகையைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 351,774 கூட்டுத்தொகையான 23 தீர்வு செய்யப்படாத ஆராய்ச்சி முற்பணங்களில் 11 முற்பணங்கள் 15-19 ஆண்டுகளுக்கு இடைப்பட்டிருந்ததுடன், 08 முற்பணங்கள் 02 - 12 ஆண்டுகளுக்கு இடைப்பட்டிருந்ததுடன், 04 முற்பணங்கள் 08 - 13 ஆண்டுகளுக்கும் இடைப்பட்டிருந்தன.

(ஊ) 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் 100 விழா முற்பண மீதிகளில் ரூபா 223,827 கூட்டுத்தொகையையும் 05 உத்தியோகத்தர் களுக்குரிய 2002 ஆம் ஆண்டு முதல் செயற்பாடற்றிருந்த 05 கடன் மீதிகளில் ரூபா 223,524 கூட்டுத்தொகையையும் 2002 ஆம் ஆண்டிலிருந்து இருந்து வரும் வெளிநாடு சென்ற உத்தியோகத்தர்களின் 03 கடன் மீதி ரூபா 162,987 கூட்டுத்தொகையையும் ஆண்டின் இறுதி வரையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குரிய கெட்டம்பேயில் அமைந்துள்ள 40.97 பேர்ச் காணி 1987 திசெம்பர் 31 ஆம் திகதி முதல் 2017 திசெம்பர் 31 வரை 30 ஆண்டு காலப்பகுதிக்காக குத்தகை உடன்படிக்கையொன்று மூலம் மலைநாட்டு உழவர் மறுசீரமைப்புத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், 1992 திசெம்பர் 31 ஆம் திகதி முதல் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குரித்தாக ரூபா 4,720,000 கூட்டுத்தொகையான நிலுவை நிலவாடகை பல்கலைக்கழகத்திற்கு அறவிடப்பட்டிருக்கவில்லை. 2008 ஆம் ஆண்டில் அங்கு புதிய இரண்டு மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபை உருவாக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக பல்கலைக்கழக முகாமைத்துவம் எவ்வித முறையான அங்கீகாரமொன்றையும் வழங்கியிருக்கவில்லை.

(ஏ) வெளிநாட்டு வழங்கல் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக தனியார் கம்பனியொன்றுக்கு 2003 ஆம் ஆண்டின் போது ரூபா 318,892 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அச்சேவையை வழங்குவதை கம்பனி தவிர்த்திருந்தமையால் குறித்த தொகையை அறவிடுவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் தவறியிருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டில் ரூபா 10,646,769,610 கூட்டுத்தொகையான கீழே காண்பிக்கப்பட்டுள்ள 13 கணக்கு விடயங்களில் அவற்றிற்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | பேராதனைப் பல்கலைக் கழகத்தை சர்வதேச தரத்திற்கு கொண்டு செல்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 84,225,964 | குறித்த நோக்கத்தை நிறைவேற்றியதை உறுதிப்படுத்து வதற்கான தகவல்களும் உறுதிப்படுத்தும் ஆவணங்களும் |
| (ஆ) | நானாவித கடன்பட்டோர் | 1,185,993 | பெறுமதியை உறுதிப்படுத்துவதற் கான பட்டோலைகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் |
| (இ) | கலைப்பீடத்தின் 06 விரிவுரை யாளர்களுக்கும் 08 உத்தியோ கத்தர்களுக்கும் வழங்கப்பட்ட பல்கலைக்கழக ஆராய்ச்சிக் கொடுப்பனவுகள் | 1,264,019 | ஆராய்ச்சி செயற்திட்டங்கள் மற்றும் அறிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 07 பீடங்களுக்குரிய 61 விரிவுரையாளர்களுக்கான ஆராய்ச்சிக் கொடுப்பனவுகள் | 11,483,905 | ஆராய்ச்சி அறிக்கைகள் |
| (உ) | பொறியியல் பீடத்தின் மின் மற்றும் இலத்திரனியல் பட்டப்பின் படிப்பு பாடநெறிக்காக 05 விரிவுரையாளர்கள் மேற்கொண்ட விரிவுரை களுக்கான கொடுப்பனவு | 351,000 | நடைபெற்ற தினங்கள், மணித்தியால எண்ணிக்கை மற்றும் மணித்தியாலத்திற்கான கொடுப்பனவு |
| (ஊ) | தொலைக்கல்வி மற்றும் தொடர் கல்வி நிலையத்தின் பிரதிப் பணிப்பாளராக சேவை புரிவதற்காக 2012, 2013 ஆண்டுகளில் மேற்கொள்ளப் பட்ட கொடுப்பனவுகள் | 342,276 | அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடநெறிகள் மற்றும் பாடவிதான அபிவிருத்தி செய்தல் செயற்பாடுகள் |
| (எ) | 2009 முதல் 2014 ஆம் ஆண்டுகளுக்காக இனங் காணப்படாத பெறுவனவுகள் | 46,220,699 | பெறுமதியை உறுதிப்படுத்து வதற்குரிய பட்டோலைகள் |
| (ஏ) | தொலைக்கல்வி மற்றும் தொடர் கல்வி அலகின் நிலையான சொத்துக்கள் மானியம் | 1,468,164 | பட்டோலைகள் மற்றும் பெறுவனவு உறுதிப்படுத்தல்கள் |
| (ஐ) | நிலையான சொத்துக்களும் கணனி உதிரிப் பாகங்களும் | 10,422,295,853 | நிலையான சொத்துப் பதிவேடும் கணனிச் சொத்துப் பதிவேடும் |
| (ஒ) | A 0043 நாட்குறிப்பிலிருந்து நடைமுறை வேலைக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்த ஒப்பந்த பெறுமதி | 68,968,339 | ஒப்பந்த பெறுமதிக்குரிய உறுதிப்படுத்தல்கள், கிரயப் பெறுமதி உறுதிப்படுத்தல் அறிக்கை. |
| (ஓ) | விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்திடமிருந்தும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தி டமிருந்தும் பெறவேண்டிய மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்குச் செலுத்த வேண்டிய பெறுமதி | 5,520,523 | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய பெறுமதி தொடர்பாக மீதி உறுதிப்படுத்தல்கள், பட்டோலைகள் |
| (ஔ) | விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்திடமிருந்து பெற வேண்டிய மின்சாரக் கட்டணம் | 359,336 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| (க) | உடன்படிக்கை மீறிய 13 விரிவுரையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் பிணைப் பொறுப்பு பெறுமதி அறவிடப்படுவதற்குரித்தான பாதுகாப்பு பிணை | 3,083,539 | ஊழியர் நம்பிக்கை நிதிய உரித்து தொடர்பான தகவல்கள் |
| | | ------------------ | |
| | | 10,646,769,610 | |
| | | =========== | |

**2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) பல்கலைக்கழக தாபன விதிக்கோவை | |
| பல்கலைக்கழக தாபனவிதிக் கோவையின் xxv ஆம் அத்தியாயத்தின் 2.2(ஊ) பிரிவு | 2013 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ரூபா 161,470 பெறுமதியான வாகன விபத்துக்கள் மூலம் ஏற்பட்ட இழப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. |
| பல்கலைக்கழக தாபனவிதிக் கோவையின் II ஆம் பகுதி IX ஆம் அத்தியாயத்தின் 03 ஆம் பந்தி | மீண்டுவரும் கணக்கிற்கு மேலதிக நேரக் கொடுப்பனவை மேற்கொள்வதற்காக மூலதன செலவினக் கணக்கிலிருந்து ரூபா 8,000,000 தொகை மாற்றப்பட்டிருந்தது. |
| 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் XIII ஆம் பகுதியின் 99(1) ஆம் பிரிவு | பல்கலைக்கழக நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 22,022,236 பணத்தை மிருக வைத்திய பீடத்தினால் நிர்வகிக்கப்படும் 18 வெவ்வேறு நிதியங்களுக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| 2005 பெப்ரவரி 03 ஆம் திகதிய 2005/01 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரமும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் பிரகாரம் | ரூபா 114,192 கூட்டுத்தொகையான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு தொகையை குறித்த நிதியங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| 2012 ஏப்ரல் 16 ஆம் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 7/2012 மற்றும் 2003 திசெம்பர் 29 ஆம் திகதிய 837 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம், மணித்தியாலம் ஒன்றிற்கான விரிவுரை படிகள் ரூபா 1,500 தொகையும் செயல்முறை பயிற்சிக்காக மணித்தியாலம் ஒன்றிற்காக ரூபா 200 தொகையும் செலுத்த முடியுமாக இருந்த போதிலும், 09 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 01 மணித்தியாலத்திற்கு ரூபா 1,750 வீதமும் செயல்முறை பயிற்சிக்காக 01 மணித்தியாலத்திற்கு ரூபா 1,500 வீதமும் ரூபா 160,250 தொகை செலுத்தப்பட்டிருந்தமையின் காரணமாக ரூபா 64,150 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

(ஆ) இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசாங்க நிதிப் பிரமாணம்

| | | |
|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 71 | கலைப் பீடத்தின் கல்வி மற்றும் கல்விசாரா பதவியணியினருக்கு உரித்தான நிலையத்தில் கடமை புரிந்தமைக்காக ரூபா 745,520 தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ii) | நிதிப்பிரமாணம் 104, 104(3) | 2011 பெப்ரவரி 08 ஆம் திகதி விபத்திற்குட்பட்ட CPPB-5574 ஆம் இலக்க வாகனத்தின் ரூபா 651,452 ஆன விபத்திற்குரிய மதிப்பீட்டுப் பெறுமதி தொடர்பாகவும் 2013 யூலை 31 ஆம் திகதி கலைப் பீடத்திற்குரிய CPNB 3979 ஆம் இலக்க வேன் வண்டிக்கு ஏற்பட்ட ரூபா 27,922 தொகையான விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 371 | i. செயல் நிமித்த உப கட்டுநிதி தேவையான அளவிற்கே வழங்க முடியுமான போதிலும், பொறியியல் பீடத்தால் 07 சந்தர்ப்பங்களின் போதும் மருத்துவ பீடத்தினால் 06 சந்தர்ப்பங்களின் போதும் தேவையான அளவினை விட மேலதிகமாக ரூபா 192,890 தொகை முற்பணம் வழங்கப்பட்டிருந்தன.<br>ii. மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர் ஒருவருக்கு 03 சந்தர்ப்பங்களில் ரூபா 950,000 தொகையான முற்பணத் தொகை வழங்கப்பட்டிருந்தன. |
| | நிதிப்பிரமாணம் 371(1) | i. விவசாய விஞ்ஞான பீடத்தினால் ரூபா 201,468 பெறுமானத்திலான முற்பணம் 05 வெளிநிறுவனங்களுக்கு 06 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்தன.<br>ii. உடற்கல்வி திணைக்களத்தின் பணிப்பாளரால் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 655,700 கூட்டுத்தொகையான முற்பணத் தொகையில் ரூபா 629,760 தொகை விளையாட்டு மதியுரையாளருக்கு வழங்கப்பட்டிருந்தன. |
| | நிதிப்பிரமாணம் 371 (2)(ஆ) | பொறியியல் பீடம் 08 சந்தர்ப்பங்களின் போது ரூபா 335,325 அளவிலான முற்பணத்தையும், மருத்துவ பீடத்தின் உத்தியோகத்தர்கள் 05 பேருக்கு 06 சந்தர்ப்பங்களில் ரூபா 675,000 அளவிலான முற்பணத் தொகையும், விவசாய விஞ்ஞான பீடத்தில் 52 சந்தர்ப்பங்களின் போது ரூபா 2,403,993 |

| | |
|---|---|
| | அளவிலான முற்பணமும் வரையறையை விஞ்சி வழங்கப்பட்டிருந்தன. |
| நிதிப் பிரமாணம் 754, 756(1) மற்றும் 758(1) | பொறியியல் பீடத்தின் வேலை அலகிற்குச் சொந்தமான 02 ஆயுதங்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள் களஞ்சியங்களுக்குரிய வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் 1997 ஆண்டிற்கு முன்னிருந்து மீளாய்வாண்டு வரை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், சில ஆயுதங்கள் நீண்டகாலமாக பாவனையிலிருந்து கைவிடப்பட்டிருந்தன. |

(இ) சுற்றறிக்கை

| | |
|---|---|
| 1990 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 40/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 06 மாதங்களுக்கு ஒரு தடவை வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு தொடர்பாக பொறுப்பான பதவிநிலைத்தர உத்தியோகத்தர் மூலம் பரீட்சித்து மாதாந்த எரிபொருள் இணக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும், மிருக வைத்திய பீடதத்திற்குச் சொந்தமான 10 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் வாகனங்களில் எரிபொருளுக்காக மீளாய்வாண்டில் ரூபா 2,628,578 தொகை பெறுமதியான 21389 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தன. |
| 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றிக்கை | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும், 03 பீடங்களினதும் தகவல் தொழில்நுட்ப நிலையத்தினதும் ரூபா 81,004,368 பெறுமதியான கணனி தொடர்பாக அவ்வாறான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) முகாமைத்துவ மற்றும் உள்ளக கட்டளைகள்

| | |
|---|---|
| 2002 செப்தெம்பர் 21 ஆந் திகதிய 307.10.2 கட்டுப்பாட்டுச் சபை தீர்மானத்தின் 4.2 ஆம் பந்தி | 05 வருடங்களுக்கு ஒருமுறை வீட்டு வாடகை திருத்தப்படாததன் காரணமாக 2008 சனவரி 01 முதல் 2012 திசெம்பர் 31 வரை ரூபா 11,877,000 ஆன வாடகையும் 2013 ஆம் ஆண்டின் செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையில் 2013 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 5,344,650 தொகையான வாடகையும் பல்கலைக்கழகத்தால் குறைவாக அறவிடப்பட்டிருந்தது. |

### 2.2.6 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 835(2)(இ) பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் இப்பல்கலைக்கழகத்தின் மாணவர் விடுதிகளுக்காக அங்குனாவெல மற்றும் கிரிபத்கும்புற ஆகிய பிரதேசங்களில் 03 கட்டிடங்கள் மாதமொன்றிற்கு ரூபா 196,000 வீதம் வருடத்திற்கு ரூபா 2,352,000 இற்காக உடன்படிக்கை கையொப்பமிட்டு அதற்காக 06 மாதங்களுக்குரிய வாடகை செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) நிரந்தர சேவையில் விரிவுரையாளர்கள் இருக்கும் போது அவ்விடயங்களை கற்பிப்பதற்காக வெளி விரிவுரையாளர்களை ஈடுபடுத்தியதன் காரணமாக மீளாய்வாண்டின் போது கலை பீடத்தின் 103 விடயங்களுக்கும் பொறியியல் பீடத்தின் 20 விடயங்களுக்கும் முறையே ரூபா 4,652,160 தொகையும் ரூபா 1,132,322 தொகையுமாக வெளி விரிவுரையாளர்களுக்கு விரிவுரைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) 1990 பெப்ரவரி 06 ஆம் திகதிய பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் 422 ஆம் இலக்க சுற்றறிக்கை, 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவு, 2003 சனவரி 09 ஆம் திகதிய PEI/174/1-2003 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கை ஆகிய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக அங்கீகாரமொன்று இல்லாமல் பாடநெறி இணைப்பு படிகளாக ரூபா 628,800 தொகையும் கௌரவக் கொடுப்பனவுகளாக ரூபா 102,500 தொகையும், பட்டப்பின் படிப்பு பாடநெறிகளுக்காக ரூபா 84,500 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக நிதி விளைவுகள் ரூபா 655,872,586 தொகையான பற்றாக்குறையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 405,269,886 பற்றாக்குறையாக இருந்தமையால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 250,602,700 ஆல் அதிகரித்திருந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) (i) சர்வதேச மட்டத்தில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக ஆராய்ச்சி நிலையமொன்றை உருவாக்கி அதன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 100 மில்லியன் ஏற்பாடு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலிருந்து வழங்கப்பட்டிருந்தது. இதற்காக எந்த திட்டமொன்று இல்லாமலும் நோக்கங்கள் மற்றும் இலக்குகளுக்கு புறம்பாக ரூபா 84,255,964 தொகை செலவு செய்து பீடங்களுக்காக அலுவலக உபகரணங்கள், சம்பளம் மற்றும் படிகள் வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) சர்வதேச செயலமர்வுகளுக்கு சமூகமளிப்பதற்காக பதவியணியினருக்கும் மாணவர்களுக்கும் ரூபா 4 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டு ரூபா 7,371,998 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் எந்தவொரு மாணவரோ அல்லது விரிவுரையாளரோ அந்நோக்கத்திற்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 101(ஈ) பிரிவின் பிரகாரம் குறித்த ஒரு நோக்கத்திற்காக கிடைத்த பணம் அச்செயற்பாட்டிற்கு புறம்பான செயற்பாடொன்றிற்காக செலவு செய்யப்படக் கூடாத போதும், அதற்கு இணங்காத வகையில் முன்னைய ஆண்டில் பல்கலைக்கழக மூலதன ஏற்பாட்டின் மூலம் ரூபா 4,033,627 தொகை சர்வதேச ஆராய்ச்சி நிலைய செயற்திட்டத்தின் செலவினத்திற்காக செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழக தாபனவிதிக் கோவையின் X ஆம் அத்தியாயத்தின் II 27(1) ஆம் பிரிவின் பிரகாரம் கல்வி விடுமுறை பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்கூடிய காலஎல்லை 39 மாதங்களாக இருந்த போதிலும், 2003 ஆம் ஆண்டில் கலாநிதிப் பட்டமொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக 06 மாத சம்பளத்துடன் கூடிய விடுமுறை பெற்றுக்கொண்டிருந்த விரிவுரையாளர் ஒருவருக்கு மீண்டும் இங்கிலாந்தின் லிசெஸ்டர் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டமொன்றைப் பின்பற்றுவதற்காக 2007 முதல் 2012 வரை 50 மாதங்களும் 09 நாட்களும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் இவ்விரிவுரையாளர் வெளிநாடு சென்றதை உறுதிப்படுத்தும் சான்றுகளான கடவுச்சீட்டு மற்றும் பெற்றுக்கொண்ட கலாநிதிப் பட்டத்திற்கான சான்றிதழ் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், பல்கலைக்கழக நிதியத்திலிருந்து அவருக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 2,426,474 தொகை ஆக்கபூர்வமான சம்பளமாக அவதானிக்கப்படவில்லை.

(இ) பொறியியல் பீடத்தின் வாகன வேலைப் பிரிவு 2013 மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு மீளாய்வாண்டில் ஊழியர் சம்பளம் மற்றும் படிகள் என்பவற்றிற்காக ரூபா 1,529,610 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான அனைத்து வாகனங்களையும் வாகன வேலைப் பிரிவிற்கு பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக அனுப்பப்படாமையால் மீளாய்வாண்டின் போதும் ரூபா 10,186,609 தொகையான செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டு வாகனங்கள் தனியார் நிறுவனங்கள் மூலம் திருத்தங்களும் பராமரிப்பு வேலைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஈ) மிருக வைத்திய பீடத்தின் பண்ணைகள், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் பண்ணை முகாமையாளர் ஒருவர் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2014 ஜனவரி 17 ஆம் திகதி வரையிலும், ஆண்டில் ஆராய்ச்சி நிதியத்திலிருந்து ரூபா 251,336 தொகை சம்பளம் செலுத்தி ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு மாவலவத்த பண்ணையில் பெறுமதி கூடிய கால்நடைகளையும் ஆதனங்களையும் பாதுகாப்பதற்கான பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

(உ) மிருக வைத்தியசாலைக்காக நிதிப்பிரமாணம் 71 இன் பிரகாரம், புதிய பதவிகளை உருவாக்குவதற்கும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை அதிகரித்துக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாமல் மிருக வைத்தியசாலை பராமரிப்பு நிதியத்திலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 1,213,597 கூட்டுத்தொகை சம்பளமாக செலுத்தி தற்காலிக அடிப்படையில் 10 ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(ஊ) 2013 சனவரி 14 ஆம் திகதிய ஏ/05 சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் (நிர்வாகம்) கடிதத்தின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டில் அவசர கடமை பிரயாணங்களுக்காக

பீடத்தின் வாகனங்கள் போதுமானதாக இல்லாதிருந்தால் ஏனைய பீடமொன்றிலிருந்து வாகனங்களை பெற்றுக்கொள்ள வேண்டியதுடன், அவ்வாறு முடியாவிட்டால் மாத்திரம் தனியார் வாகனமொன்றின் சேவையைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், மிருக வைத்திய பீடத்திடம் 08 வாகனங்கள் இருக்கையில் 2013 ஆம் ஆண்டில் தனியார் வாகன வழங்குனரிடமிருந்து சேவைகள் பெற்றுக்கொண்டு ஆராய்ச்சி நிதியத்திலிருந்து தனியார் வாகன வழங்குனருக்கு ரூபா 531,019 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(எ) பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் சிவில் பொறியியல் திணைக்களத்தின் மாணவர்களின் கல்வி ஆராய்ச்சிக்கான 05 ஆய்வுகூடங்கள் மூலம் மேற்கொள்ள வேண்டிய கல்வி ஆராய்ச்சிக்குப் பதிலாக பல்கலைக்கழகத்தின் மனித மற்றும் பௌதீக வளங்கள் பயன்படுத்தப்பட்டு வழமையான கடமை நேரங்களில் வெளித்தரப்பினரிடமிருந்து பரிசோதனைகளைப் பொறுப்பேற்று பரிசோதனை அறிக்கை விநியோகிக்கப்பட்டு அதற்காக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 6,137,738 தொகையும் ரூபா 13,362,371 தொகையான வருமானம் உழைக்கப்பட்டு அதில் முறையே ரூபா 3,521,704 தொகை மற்றும் ரூபா 4,136,194 தொகை ஆய்வுகூடத்தில் சேவை புரிந்த ஆய்வுகூடத்திற்கு பொறுப்பான விரிவுரையாளர்கள் மற்றும் ஆய்வுகூடத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்காக 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 107(6)(அ) பிரிவிற்கு இணங்காத வகையில் செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) மூலதன கொடுப்பனவின் கீழ் விடுதிகளுக்காக பகிர்ந்தளிப்பதற்கு 2013 மார்ச் 05 ஆம் திகதி ரூபா 5,366,766 பெறுமானத்துடன் கூடிய மரத்திலான கதிரைகள் மற்றும் மரத்திலான மேசைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அவை குறித்த விதப்புரைகளுக்கு இணங்காதிருந்ததுடன், அதில் ரூபா 417,600 பெறுமதியான 36 மேசைகள் 2014 சனவரி 31 ஆம் திகதி வரையில் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் II ஆம் பகுதியின் 08 ஆம் அத்தியாயத்தின் 6.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச சேவையிலிருந்து பெற்றுக்கொண்ட பயிற்சி மற்றும் அறிவைப் பயன்படுத்தி அலுவலக நேரத்திற்குப் புறம்பாக அல்லது அனுமதியுடன் அலுவலக நேரத்தில் மேற்கொள்ளப்படும் அலுவலகமல்லாத வேலைகளுக்காக கிடைக்கும் கட்டணத்தில் 10 சதவீதம் பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், பட்டப்பின் பாடநெறிக்காக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சேவை புரியும் 07 விரிவுரையாளர்களுக்கு செலுத்தப்பட்ட இணைப்புக் கட்டணத்தில் 10 சதவீதமான ரூபா 43,000 தொகை கணக்காய்வுத் திகதியான 2014 சனவரி 20 ஆம் திகதி வரையில் பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் I ஆம் பகுதியின் III ஆம் அத்தியாயத்தின் 26 ஆம் பந்தியின் பிரகாரம் வெளி விரிவுரையாளர்களுக்காக விரிவுரைகளுக்கு செலவாகும் தொகை மிகவும் அதிகமாக இருந்தமையால் வெளி விரிவுரையாளர்களைப் பெற்றுக்கொள்ளும் வழக்கத்தை பலவீனப்படுத்த வேண்டுமென அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அங்கீகரிக்கப்பட்ட விரிவுரையாளர்களுக்கான வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பை மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது வெளி விரிவுரையாளர்களை ஈடுபடுத்தி அதற்காக மொத்தம் ரூபா 14,282,952 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஓ) நானாவித கடன்டோரின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 5,902,577 தொகையான 03 கடன் மீதிகள் 02 வருடங்கள் முதல் 08 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதும், தீர்த்துவைப்பதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு உடன்படிக்கை மீறிய 214 விரிவுரையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 203,720,109 தொகையாக இருந்ததுடன், அதில் ரூபா 200,062,201 தொகையான பிணைப்பொறுப்பின் மூலம் அறவிடப்படாத காலம் 1970 முதல் 2013 வரை 40 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்தது.

(க) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் 12 நிதியங்களில் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,024,433 ஆக இருந்ததுடன், ஆண்டின் போது அந்நிதியங்களுக்காக ரூபா 1,651,725 கிடைக்கப்பெற்று, ஆண்டின் இறுதித் திகதியில் ரூபா 10,676,158 ஆன மீதியொன்றாக அதிகரித்திருந்ததுடன், குறித்த நிதியங்களின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக பயன்படுத்துவதற்கு பல்கலைக்கழக முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(கா) குறுகிய கால பாடநெறிகளை நடாத்தி வருமானத்தை உழைத்தல் தகவல் தொழிநுட்ப நிலையத்தின் ஒரு நோக்கமொன்றாக இருந்த போதும், 2012 ஆம் ஆண்டில் எவ்வித வருமானமும் உழைக்கப்படாதிருந்ததுடன், 2013 ஆம் ஆண்டின் போது பாடநெறியொன்று மாத்திரம் நடாத்தப்பட்டு ரூபா 240,000 வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்நிலையத்தில் ஆரம்பத்தில் காணப்பட்ட குறுங்கால பாடநெறிகளின் அளவு குறைவடைந்துள்ளதாகவும் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக எதிர்காலத்திட்டங்கள் அல்லது புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்தல் போன்றவை மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(கி) தகவல் தொழிநுட்ப நிலையத்தில் கைதவிர்க்கப்பட வேண்டிய பொருட்கள் அகற்றப்படாமல் 02 அறைகளில் குவித்து வைக்கப்பட்டிருந்ததுடன், சகல கணனி ஆய்வுகூடங்கள் பயன்படுத்த முடியாத வகையில் கணனி உப பாகங்கள் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ITC-SB 2 பொருட் பதிவேட்டின் பிரகாரம், 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 528,257 தொகையான பொருட்கள் அகற்றப்பட்டிருந்த போதிலும், நி.பி 770, 772 மற்றும் 747 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கீ) பல்கலைக்கழக தரப்படுத்தலின் ஒரு பிரதான நியதியாக பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள் கருத்தில் கொள்ளப்படுவதுடன், அதற்காக திறைசேரியிலிருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 12,400,000 தொகை உரிய செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தாமல் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(கு) பொருளாதார கஷ்டங்கள் உள்ள மாணவ மாணவிகளுக்கு புலமைப் பரிசில் வழங்குவதற்காக வெளிநபர்களால் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டிருந்த நன்கொடைகளை முதலீடு செய்து கிடைக்கும் வட்டியிலிருந்து 80 சதவீதமான அளவை குறித்த செயற்பாட்டிற்காக பயன்படுத்துவதற்கு நிர்வாக சபையால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக முறையான வேலைத்திட்டமொன்று தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படாததன் காரணமாக மீளாய்வாண்டில் புலமைப் பரிசில்கள் வழங்குவதற்காக பயன்படுத்தப்பட வேண்டிய ரூபா 12,801,890 தொகையில் 28 சதவீதமான ரூபா 3,577,098 தொகை மாத்திரம் அதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(கூ) 2004 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு மருத்துவ மாணவர்களின் கற்கை காலஎல்லை 05 ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2011 ஆம் ஆண்டின் இறுதி வரையில் மூன்று மாணவர்களின் பெறுவனவுகளாக ரூபா 1,640,310 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(கெ) நீண்டகாலமாக இருந்து வரும் ரூபா 1,821,032 தொகையான கடன்மீதி அறவிடப்பட வேண்டியிருந்தது.

(கே) 2010 மே 22 ஆம் திகதிய 306.3.1.15 நிர்வாக சபை தீர்மானத்தின் பிரகாரம் பேராசிரியர்களிடமிருந்து மாதமொன்றுக்கு ரூபா 15,000 வீதம் வீட்டு வாடகை அறவிடப்பட வேண்டிய போதிலும், மாதமொன்றிற்கு ரூபா 1,000 வீதம் 31 மாதங்களுக்கு ரூபா 31,000 தொகை மாத்திரம் அறவிடப்பட்டதன் காரணமாக ரூபா 434,000 தொகையான நட்டமொன்று பல்கலைக்கழக நிதியத்திற்கு ஏற்பட்டிருந்தது.

(கை) 2013 செப்தெம்பர் 15 ஆம் திகதி அளவில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தருக்கு சேமலாப நிதியத்தின் பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வீட்டு வாடகை தொகையான ரூபா 45,989 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கொ) பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான ரத்மலே காணியின் 25 பேர்ச் அளவிலான காணித் துண்டொன்று 1975 ஆம் ஆண்டிலிருந்து கண்டி கடவத் சதர கங்கவட்ட கோரளை பிரதேச சபைக்கு குத்தகை அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், புதிய விலை மதிப்பீட்டின் பிரகாரம் குத்தகை உடன்படிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய போதிலும், 1997 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையில் குத்தகை உடன்படிக்கை கையொப்பமிடப்படாமல் குறித்த ஆதனங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்த காரணத்தினால் இக்காணிக்கு குறித்த பிரதேச சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 6,724,000 ஆன குத்தகை வாடகை 2013 திசெம்பர் 31 வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் நிரந்தர சேவையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் தற்காலிக பாதுகாப்பு சேவையின் உத்தியோகத்தர்களுக்காக முறையே ரூபா 40,596,609 தொகையும் ரூபா 55,885,826 தொகையுமாக மொத்தம் 96,482,435 சம்பளம் மற்றும் படிகளாகவும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த ஊழியர்களுக்கிடையே 111 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மிகையாக இருக்கும் போது ரூபா 10,672,211 தொகை மேலதிக நேரச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) (i) 1995 இன் 01 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் ஏதாவது நிலையமொன்றை உருவாக்குவதற்கு நிர்வாக சபையின் இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொண்டு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 45 ஆம் பிரிவின் பிரகாரம் குறித்த தரப்பினருடன் பல்கலைக்கழக நிர்வாகம் உடன்படிக்கையொன்றை மேற்கொள்ள வேண்டிய போதிலும், அதற்கு இணங்காத வகையில் நடவடிக்கை எடுத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2012 செப்தெம்பர் 27 ஆம் திகதிய UCC/C/PS/7/2 ஆம் கடிதத்தின் பிரகாரம் கொழும்பில் உருவாக்கப்பட்டிருந்த Lanka Education & Research Network (LEARN) நிறுவனம் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்ப நிலையத்தில் 2013 சனவரி மாதத்தில் தாபித்திருந்தது. 2013 திசெம்பர் மாதம் வரையில் அந்நிறுவனத்திற்கு வழங்கிய வசதிகளுக்காக எவ்வித தொகையும் கட்டுப்பாட்டுச் சபையால் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்த போதிலும், தகவல் தொழில்நுட்ப நிலையத்திற்கு இணையத்தள வசதிகளை வழங்குவதற்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 1,985,489 தொகை LEARN நிறுவனத்திற்குச் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) பொறியியல் பீடத்தின் இணையத்தள மற்றும் தொடர்பாடல் சேவைப் பிரிவு (ICSU) மூலம் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இணையத்தள சேவை நடவடிக்கைகள் மற்றும் அதன் பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இணையத்தள வசதிகளை வழங்குவதற்காக Lanka Education & Research Network (LEARN) என்ற தனியார் நிறுவனத்தின் மூலம் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 45 ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழக நிர்வாகம் அந்நிறுவனத்துடன் உடன்படிக்கையொன்றை மேற்கொள்ளாமல் இருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அச்சேவைகளுக்காக ரூபா 22,189,833 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2000 சனவரி 19 ஆம் திகதிய 380 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையங்களுக்கும் பதவியணியினருக்கும் மதியுரை சேவைகளை வழங்குவதற்காக கிடைக்கப் பெறும் தொகையில் பல்கலைக்கழக நிர்வாகக் கட்டணமாக 5 சதவீதம் ஒதுக்கப்படுகின்றது. பல்கலைக்கழக முகாமைத்துவத்தின் விருப்பின் பேரில் இந்த நிர்வாகக் கட்டணத்தில் 30 சதவீதத்தை பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டணமாக ஒதுக்கப்பட்டிருந்ததுடன், இத்தொகையில் 25 சதவீதம் நிதியாளர் நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்றது. திறைசேரியின் அங்கீகாரம் இல்லாமலும் பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் II ஆம் பகுதியின் vii ஆம் அத்தியாயத்திற்கு முரணாகவும் இந்நிதியத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையில் நிதியாளர் தமது விருப்பத்தின் பேரில் தீர்மானிக்கும் வெவ்வேறு சதவீதங்களின் பிரகாரம் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கணக்குப் பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு இடையே 2007 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை ரூபா 2,513,645 தொகை படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) பேராதனைப் பல்கலைக்கழகத்தின் நாளாந்த கடமை நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்காக மாதாந்த கொடுப்பனவு முறைமையின் கீழ் பெற்றுக்கொண்ட பஸ் வண்டிக்காக 2013 மார்ச் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக ரூபா 1,273,500 கூட்டுத்தொகையான மாதாந்த வாடகையும், ரூபா 348,813.60 எரிபொருள் கொடுப்பனவாகவும் செலுத்தப்பட்டிருந்ததுடன், இக்காலப்பகுதியில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட கிலோ மீற்றர்களின் எண்ணிக்கை 9374 ஆக இருந்தன. அதன் பிரகாரம் ஒரு கிலோ மீற்றருக்கு ரூபா 113.13 முதல் 206.90 வரையான கிரயம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2013 மார்ச் 17 முதல் திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் ஒரு கிலோ மீற்றருக்காக சராசரி செலவினம் ரூபா 173.06 ஆக இருந்தது. பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமாக இருந்த பஸ் வண்டிகளை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு கவனம் செலுத்தாமல் மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட இவ்வாகனத்திற்கு கூடுதலான கிரயமொன்றை மேற்கொள்ள நேர்ந்தமையால் பல்கலைக்கழக நிதியத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் I ஆம் பகுதியின் VII ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பந்தி II ஆம் பகுதியின் IX ஆம் அத்தியாயத்தின் 2.2 பந்தியின் பிரகாரம் அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளாமல் 2013 ஆம் ஆண்டின் இருப்பு மெய்மையாய்வு நடவடிக்கைகள் மற்றும் அதன் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 89 உத்தியோகத்தர்களுக்காக அவர்களின் சம்பளத்தில் 40 சதவீதத்திலிருந்து 85 சதவீதம் வரையான சதவீதமொன்று படிகளாக ரூபா 1,474,042 தொகை உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) கணனி கொள்வனவின் நோக்கம் அல்லது திட்டமொன்று இல்லாமல் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரி மற்றும் வழங்கப்பட்டிருந்த கணனிகளுக்கிடையே தன்மை

மற்றும் குணநலன் தொடர்பாக வேறுபாடு இருக்கையில் 2013 ஏப்ரல் 05 ஆம் திகதி ரூபா 4,950,000 செலவு செய்து 50 கணனிகள் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அக்கணனிகளின் உத்தரவாதக் காலம் 2014 மார்ச் 27 ஆம் திகதி முடிவடைந்திருந்ததுடன், சில கணனிகள் அதுவரையில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2013 பெப்ரவரி 03 ஆம் திகதி முதல் 2013 மார்ச் 07 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அம்பாறை, மொனறாகலை, இரத்தினபுரி மற்றும் கொழும்பு ஆகிய நான்கு மாவட்டங்களில் வீட்டு மருந்துப் பாவனை அளவிடல் செயற்திட்டத்திற்காக மருத்துவ பீடத்தினால் மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள சுற்றுலாவிற்காக தங்குமிட வசதிகள், உணவு பானங்கள் மற்றும் போக்குவரத்து வசதிகள் என்பவற்றிற்காக செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அச்செலவினத்தை குறித்த மாவட்டத்தின் வழங்குனரிடம் பெற்றுக்கொள்ளாமல் கண்டியில் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து பெற்றுக்கொண்டு மொத்தம் ரூபா 2,068,265 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்திற்காக மருத்துவ பீடத்திற்கு நிதி ஏற்பாடு அவுஸ்திரேலியா நிவ் காசல் பல்கலைக்கழகத்திடமிருந்து 2013 மே 14 ஆம் திகதி கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், அந்த ஏற்பாடுகள் கிடைப்பதற்கு முன்னர் அதாவது, 2011 ஆம் ஆண்டின் போது செயற்திட்ட மதியுரை சேவைகள் மற்றும் தரவுகள் தயாரித்தல் மற்றும் பகுப்பாய்வுக் கட்டணமாக ரூபா 807,500 தொகையான முற்பணம் பல்கலைக்கழக நிதியத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், அத்தொகை மீண்டும் பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 வெளிப்படையான மோசடிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 மார்ச் 18 ஆம் திகதி பொறியியல் பீடத்தின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 230,000 தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி கணக்காய்வுத் திகதி வரை தீர்க்கப்படாமல் இருந்ததுடன், இந்த உத்தியோகத்தரிடமிருந்து 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உத்தியோகபூர்வ விடுதி வாடகை மற்றும் நிலுவை மின்சாரக் கட்டணம் ரூபா 188,415 தொகை அறவிடுவதற்கு இருந்தது. மேலும் உத்தியோகத்தரின் சேவைக்காலத்தில் பொறியியல் பீடத்திற்குரிய ரூபா 554,520 ஆன கொள்வனவை இருப்பு பதிவேடுகளில் பதிவு செய்யாததன் காரணமாக அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 554,520 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காததால் நிறுவகத்திற்கு ஏற்பட்டிருந்த ரூபா 972,935 ஆன நட்டத்தை பணிக்கொடை நிதியிலிருந்து அறவிடப்படாமல் 2012 மார்ச் 22 ஆம் திகதி ரூபா 900,700 பெறுமதியான பணிக்கொடை தொகை விடுவிக்கப்பட்டிருந்தது. இத்தொகை பல்கலைக்கழக சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 94 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தது.

(ஆ) பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் 2.1 மற்றும் 2.2 ஆம் பந்திகளின் பிரகாரம் மேலதிக நேர வேலைக்காக அச்செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு வேறு எந்த வழிகளும் காணப்படாத விசேட சந்தர்ப்பங்களிலும் குறிப்பாக குறிப்பிடப்பட்ட, வழமையான வேலை நடவடிக்கைகளில் இருந்து விலகி அவசரமானதும், வழமையான வேலை நேரங்களில் மேற்கொள்ள முடியாத வேலைகளுக்காக மாத்திரம் அதிகாரமளித்தல் வழங்க முடியுமான போதிலும், அதற்கு இணங்காத வகையில் 2013 ஆம் ஆண்டின் ஒக்தோபர், நவம்பர், திசெம்பர் ஆகிய மாதங்களுக்காக வேலை திணைக்களத்தின் மேலதிக நேர வேலைக்காக ரூபா 1,590,435 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4.5 நிதியத்தின் குறைப்பாயன்பாடு**

ரூபா 392,000 கூட்டுத்தொகையான கலைப்பீட 05 ஆய்வு நிதியங்கள் நோக்கத்திற்குட்பட்ட ஆராய்ச்சிகளுக்கு ஈடுபடுத்தாமல் 2013 ஆம் ஆண்டின் போது மீளத் தீர்க்கப்பட்டிருந்தது.

**4.6 பயன்படுத்தப்படாத குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2004 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த கணனி தகவல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டதன் அடிப்படை நோக்கமாக பல்கலைக்கழகத்தின் உள்ளக மாணவர்களுக்காக கணனி பாடநெறிகள் மற்றும் பயிற்சிகளை வழங்கவும் வெளி நிறுவகங்களுக்காக குறுங்கால கணனி பயிற்சிகளை வழங்கி வருமானத்தை உழைத்தல் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதன் நோக்கத்தை செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் நிறைவேற்றப்படாதிருந்தமை நிறுவகத்தின் கணனிகள் மற்றும் ஆய்வுகூடம் என்பன அதிக காலம் செயற்பாடற்றுக் காணப்பட்டமையால் கண்டறியப்பட்டது.

(ஆ) ரூபா 33,249,967 பெறுமதியுடன் கூடிய ஏனைய 40 நிதிய மீதிகள் அவற்றில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்பாட்டிற்கு எடுக்காமல் நீண்டகாலமாக விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன், அம்மீதிகளை தீர்வு செய்வதற்கு அல்லது பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பொறியியல் பீடத்தின் இணையத்தள மற்றும் தொடர்பாடல் சேவை அலகிற்குச் சொந்தமான Surge Protectors என்ற பெயரிலான 06 உபகரண உருப்படிகள் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன், 2012 நவம்பர் 21 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட 2400 இறுவெட்டுக்களில் ரூபா 43,400 பெறுமதியான 560 இறுவெட்டுக்கள் 2013 நவம்பர் மாதம் வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 1,928,200 கூட்டுத்தொகையான நிதிகள் ஆண்டின் இறுதி வரையிலும் செலவிடப்படாமல் காணப்பட்டன.

**4.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 முதல் 2013 ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற வாகன விபத்துக்கள் காரணமாக பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு ஏற்பட்ட திரட்டிய நட்டம் ரூபா 207,030 ஆக இருந்தது.

(ஆ) பொறியியல் பீடத்திற்குரிய 2013 பெப்ரவரி 08 ஆம் திகதி இடம்பெற்ற CPKC 4977 வாகன விபத்தினால் ஏற்பட்ட ரூபா 161,396 தொகையான இழப்புக்கள் மதிப்பீட்டின் பிரகாரம் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து ரூபா 127,542 தொகை கிடைக்கப் பெற்றிருந்த போதும் ரூபா 33,854 தொகையான நட்டத்தை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 சனவரி 06 ஆம் திகதி வரையில் தகவல் தொழில்நுட்ப நிலையத்தின் சகல இடங்களிலும் காணப்பட்ட கணனிகள் மற்றும் மத்திய செய்முறை அலகு என்பவற்றை பௌதீக ரீதியாக பரிசோதிக்கப்பட்டதுடன், அதன் பிரகாரம் ரூபா 1,880,358 பெறுமதியான கணனிகள் மற்றும் உப பாகங்களில் பற்றாக்குறையும் ரூபா 539,460 ஆன மிகைகளும் அவதானிக்கப்பட்டன.

(ஈ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் மற்றும் 2001 ஆகஸ்ட் 24 அம் திகதிய தொழில் ஆணையாளரின் பிர/நிறுவனம்/11 ஆம் இலக்க கடிதத்திற்கு இணங்காத வகையில் கல்விக் கொடுப்பனவு, சேமலாப நிதியப் பங்களிப்பு, ஓய்வுதிய சம்பள நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு என்பன பணிக்கொடை கணிப்பீட்டிற்காக எடுக்கப்பட்டமையால் மீளாய்வாண்டினுள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 08 பீடங்களுக்குரிய கல்விசார் பதவியணியினருக்காக ரூபா 48,812,616 கூட்டுத்தொகையான கொடுப்பனவினால் பல்கலைக்கழக நிதியத்திற்கு நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

**4.8 ஒப்பந்த நிர்வாகம்**

---------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கலைப் பீடத்தின் வெவ்வேறு குறைபாடுகளுடன் கூடிய நபர்களுக்காக நுழைவு வசதிகளை திட்டமிடும் ஒப்பந்தம் செயற்திட்ட முகாமையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட அளவீட்டுப் பத்திரத்தின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 2,548,806 ஆக இருந்த போதிலும், 269.4 ஆம் இலக்க நிதிக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பெறுமதி ரூபா 2,980,006 ஆக இருந்தது. நிதிக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட அளவீட்டுப் பத்திரம் கேள்வி கோரப்பட்ட அளவீட்டுப் பத்திரத்திற்கிடையே ரூபா 431,200 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அத்தோடு 11 செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட கிரயத்தை விஞ்சி ரூபா 374,047 தொகை அங்கீகாரமின்றி செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கொள்வனவு ஆவணங்கள் திறக்கப்படும் குழுவினால் குறித்த கொள்வனவு ஆவணங்களை மதிப்பீடு செய்வதற்காக மேற்குறித்த கைநூலின் 6.3.3 இன் பிரகாரம், திறக்கப்பட்ட கொள்வனவு ஆவணங்கள் மீண்டும் முத்திரையிடப்பட்டு மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மதிப்பீட்டுக் குழுவினால் மேற்கொள்ளக்கூடிய அனைத்துச் செயற்பாடுகளையும் மூலதனப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு கையொப்பமிடுவதற்காக மாத்திரம் மதிப்பீட்டுக் குழுவிற்கு உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(இ) மார்கஸ் பெர்ணாந்து மண்டபத்திற்கு நீர் வழங்கலை வழங்குவதற்காக HE/IDD/PFN/2010/05 ஆம் இலக்க வேலைக்காக அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 4.2.2 இற்கு இணங்காத வகையில் வேலை நிறைவு செய்வதற்கு அதிக காலம் வழங்கியமை, உடன்படிக்கைப் பிரகாரம் குறித்த காலத்தில் வேலையை நிறைவு செய்யாமை, வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் நிர்வாக சபையால் அங்கீகரிக்கப்படாமை, கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 4.7 மற்றும் 4.8 பிரிவுகளின் பிரகாரம் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாதிருந்ததுடன், வேலைக்குரிய கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் 5.1(a)(i) இன் பிரகாரம் உடன்படிக்கை கையொப்பமிட்டதன் பின்னர் மதிப்பீட்டுத் தொகையில் 60 சதவீதமான ரூபா 4,200,000 தொகையான முற்பணம் விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மருத்துவ பீடத்தின் வடிகாண் முறைமையை நவீனமயப்படுத்தும் நிர்மாண வேலை தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு 90 நாட்களில் வேலை பூர்த்தி செய்து

ஒப்படைப்பதற்காக 2013 மே 10 ஆம் திகதி ரூபா 1,952,242 தொகைக்கு கொள்வனவு அளிப்புச் செய்யப்பட்டிருந்தது. மேற்படி நிர்மாண வேலைக்காக ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்ட இறுதிப் பட்டியலின் பிரகாரம் வேலையின் பெறுமதி ரூபா 1,714,072 ஆக இருந்ததுடன், அதற்குரிய பெறுமதி சேர் வரி ரூபா 205,688 ஆக இருந்தது. எனினும் இந்த ஒப்பந்தத்தில் நிறைவேற்றப்பட்ட வேலைகளின் தரம் முறையாக காணப்படாததுடன், நியமத்திற்குரித்தாக நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) பேராதனைப் பல்கலைக்கழகத்தின் நீச்சல் தடாகத்தின் பக்கச் சுவரை திருத்தியமைக்கும் வேலை தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 825,211 பெறுமதியான வேலைப்பகுதி நிறைவேற்றப்படாதிருந்தமை, மாதிரிகளின் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்தமை, நீர் வடிகால் அமைப்பதற்காக மதிப்பிடப்பட்ட பெறுமதியை விஞ்சி ரூபா 369,803 அல்லது 148 சதவீதம் அங்கீகாரமின்றி கொடுப்பனவு செய்திருந்தமை, ரூபா 608,550 மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தமை மற்றும் 42.96 கியுப் மண்ணிற்காக ரூபா 155,129 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தமை என்பன அவதானிக்கப்பட்டன.

(ஊ) மாவலவத்த போதனா பண்ணைக்கு தொழிலாளர்களை கூலிக்கு ஆட்சேர்த்தல் 2013 ஆம் ஆண்டின் வருடாந்த முழுப் பெறுமதி ரூபா 2,789,435 ஆக இருந்ததுடன், பல்கலைக்கழக கொள்வனவு குழுவின் கொள்வனவு எல்லை ரூபா 2,000,000 இற்கு உட்படும் வகையில் 02 சந்தர்ப்பங்களில் பல்கலைக்கழகத்தின் கொள்வனவுக் குழுவினால் இவ்வொப்பந்தம் வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(எ) 2012 ஆம் ஆண்டின் போது குறித்த தரப்பினருடன் உடன்படிக்கை செய்யப்பட்ட திருத்தங்கள் மற்றும் நிர்மாண ஒப்பந்தங்களின் கூட்டுப் பெறுமதியான ரூபா 26,315,427 பெறுமதியான 06 ஒப்பந்தங்களின் உடன்படிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் வேலைகளைப் பூர்த்தி செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) 2002 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை கேள்வி மனுக்கோரி உடன்படிக்கை கையொப்பமிடப்பட்ட 43 நிர்மாணங்களுக்காக ரூபா 69,144,925 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும், கணக்காய்வு திகதி வரை உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாணங்களின் வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்த போதிலும், குறித்த ஒப்பந்தக்காரர் தொடர்பாக பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவத்தினால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) ராமநாதன் மண்டபத்தின் பூச்சு பூசுவதற்கான செயற்திட்டத்திற்காக 06 கேள்விதாரர்களால் விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், குறைந்த விலையைச் சமர்ப்பித்திருந்த ஒப்பந்த நிறுவனத்தின் விலைகளை ஏற்றுக்கொள்ளாததற்கு காரணம் காட்டாது இரண்டாவது குறைந்த விலையைச் சமர்ப்பித்திருந்த தனியார் நிறுவனத்திற்கு கொள்வனவை வழங்கியதன் காரணமாக ரூபா 1,779,657 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஒ) ரூபா 98,564,200 பெறுமதியான விவசாயப் பொறியியலாளர் கட்டிடத்தின் கட்டிடக்கலை நிர்மாண திட்டத்தை தயாரிக்கும் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக காணி கட்டிடக் குழுவினதும் நிர்வாக சபையினதும் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல், கொள்வனவுக் குழுவினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை முன்வைக்காமல் ஆகக்குறைந்த விலையான ரூபா 747,500 தொகை சமர்ப்பித்திருந்த ஒப்பந்தக்காரருக்கு வழங்காமல் இரண்டாவது ஆகக்குறைந்த விலையான ரூபா 828,000 இற்கு செயற்திட்டம் வழங்கப்பட்டிருந்ததுடன், மதியுரையாளர்களை ஈடுபடுத்தல் தொடர்பான செலவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் குறித்த வரிசை அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் 2005 ஆம் ஆண்டின் போது ரூபா 1,142,640 கட்டிட நிர்மாண மற்றும் மதியுரை சேவைகள் என்பவற்றிற்காக

கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் ஏனைய வேலைகள் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மஹஇலுப்பள்ளம உப பல்கலைக்கழக பிரிவின் நூலக மீளமைத்தல் செயற்திட்டத்திற்காக தனியார் கம்பனியொன்றுடன் 2005 சனவரி 31 ஆம் திகதி ரூபா 324,279 இற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு 2005 ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது குறித்த ஒப்பந்தத்தின் வேலை பூர்த்தி செய்யப்படாதிருக்கையில் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 294,082 தொகை தவணைப் பணமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஔ) மார்ஸ் மண்டபத்தின் முதலாவது மாடியின் ஆண்கள் மலசலகூடத் தொகுதியை திருத்தியமைக்கும் செயற்திட்டத்திற்காக தனியார் கம்பனியொன்றுடன் 2011 நவம்பர் 14 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 1,115,940 இற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு 2012 பெப்ரவரி 13 ஆம் திகதி செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் செயற்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவத்திற்கு ஒப்படைக்கப்படாதிருந்த போதிலும், இதற்காக ரூபா 330,305 தொகை தவணைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(க) பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவத்தினால் தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 7,629,409 பெறுமதியான 05 ஒப்பந்த செயற்திட்டங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், குறித்த ஒப்பந்த நிறுவனம் பேராதனைப் பல்கலைக்கழக முகாமைத்துவத்துடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையை மீறியிருந்தது. எனினும் அதற்காக உரிய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் முறையான நடவடிக்கைகளை எடுத்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) விவசாய விஞ்ஞான பீடத்தின் மிருக விஞ்ஞான திணைக்களத்தின் அலுமினியச் சட்டகத்தால் யன்னல் தயாரிப்பதற்கான மதிப்பீட்டின் பிரகாரம் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 1,752,750 ஆக இருந்ததுடன், ஒப்பந்தம் வழங்கப்பட்ட கேள்விதாரரின் பெறுமதி 959,400 ஆக இருந்தது. இதன் பிரகாரம் திணைக்கள மதிப்பீடு மற்றும் ஒப்பந்தம் வழங்கப்பட்ட கேள்விதாரரின் ஆகக் குறைந்த விலைக்களுக்கிடையே ரூபா 793,350 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(கி) ரூபா 1,444,643 விலைக்கு வேலைப் பொறியியலாளரால் மதிப்பிடப்பட்ட கல் பங்களாவைத் திருத்தம் செய்வதற்கான ஒப்பந்தத்திற்காக 2013 மார்ச் 04 ஆம் திகதி விலை திறக்கும் போது ஆகக்குறைந்த விலையான ரூபா 971,040 இற்கு ஒப்பந்த விலை விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2013 யூன் 11 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்ட ஒப்பந்தப் பெறுமதி ரூபா 1,273,440 ஆக இருந்ததுடன், ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்த விலையை விட ரூபா 302,400 கூடுதலான தொகைக்கு உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்தது.

(கீ) சிவில் பொறியியல் பிரிவின் வேலைத்தளத்திற்கு காற்றுச்சீராக்கி இயந்திரம் வழங்கப்பட்டு பொருத்துவதற்குரிய 2012 ஆகஸ்ட் 21 ஆம் திகதி முதன் முறையாக விலை விபரங்களைத் திறக்கும் போது ஆகக் குறைந்த விலையாக ரூபா 784,500 தொகை தனியார் நிறுவனமொன்றினால் விலை முன்வைக்கப்பட்டிருந்ததுடன், இரண்டாவது ஆகக்குறைந்த விலை ரூபா 882,680 தொகை வேறொரு தனியார் நிறுவனமொன்றினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இவ்விலை விபரங்களைக் கருத்திற் கொள்ளாமல் மீண்டும் 2013 பெப்ரவரி 13 ஆம் திகதி இச்செயற்திட்டத்திற்காக விலை மனுக்கோரும் போது இரண்டாவது ஆகக்குறைந்த விலை சமர்ப்பித்த தனியார் நிறுவனம் மாத்திரம் ரூபா 1,050,270

இற்கு விலை விபரங்களை முன்வைத்திருந்தது. அந்நிறுவனத்திற்கு குறித்த ஒப்பந்தத்தை வழங்கிய காரணத்தால் ரூபா 265,770 ஆன நட்டமொன்று பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு ஏற்பட்டிருந்தது.

(கு) பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உள்ளக விளையாட்டரங்கின் மின் முறைமையை நவீனமயப்படுத்துவதற்கான ஒப்பந்தம் தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டு ரூபா 6,351,248 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அது முறையாக செயற்படுத்தப்படாமை, பொருத்தப்பட்டிருந்த மின் விளக்குகள் ஒரே இயலளவுடன் இல்லாதிருந்தமை, விளையாட்டரங்கிற்கு சம அளவிலான வெளிச்சம் கிடைக்காமை போன்ற குறைபாடுகள் காணப்பட்டதுடன், கணக்காய்வு திகதி வரையில் ரூபா 339,000 பெறுமதியான எரியாத 20 மின் குமிழ்கள் அகற்றப்பட்டிருந்தன. இவ்விளக்குகளுக்குப் பதிலாக புதிய விளக்குகளை இந்நாட்டில் கொள்வனவு செய்ய முடியாதெனவும் அதற்கான தொழில்நுட்ப அறிவு பல்கலைக்கழக உத்தியோகத்தர்களுக்கு இல்லையெனவும் கண்டறியப்பட்டதுடன் மின்குமிழ்களுக்கு வழங்கப்பட்ட உத்தரவாத காலமும் இல்லாதிருந்தன.

(கூ) மாநாட்டு மண்டபமொன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக 2009 சனவரி 20 ஆம் திகதி திட்ட வரைபடம் தயாரிப்பதற்காக ரூபா 1,500,000 ஆரம்ப முற்பணமாக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், 05 ஆண்டுகள் காலம் கடந்திருந்த போதிலும் இச்செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு அல்லது முற்பணத் தொகையை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.9 தாமதமான செயற்திட்டங்கள்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ரூபா 18,715,197 தொகை பெறுமதியான 04 ஒப்பந்தங்களுக்காக 20 சதவீத ஆரம்ப முற்பணமாக ரூபா 3,450,238 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன், பிணைப்பொறுப்புக் காலம் கடந்திருந்த போதும் குறித்த செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.10 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் 03 ஆம் அத்தியாயத்தின் 02 ஆம் உப பந்தியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்ட பதவியொன்றுக்கு மாத்திரம் நியமனமொன்றோ அல்லது பதவி உயர்வொன்றோ மேற்கொள்ளப்பட முடியுமாக இருந்த போதிலும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத பொறியியல் பீடத்தின் இணையத்தள மற்றும் தொடர்பாடல் சேவை அலகின் 02 பதவிகளுக்காக மூன்று உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு ரூபா 2,348,289 கூட்டுத்தொகை சம்பளம் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) சர்வதேச ஆய்வு நிலையத்தில் அங்கீகரிக்கப்படாத பதவியொன்றுக்கு உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டு திறைசேரி அங்கீகாரமில்லாமல் 2012 ஏப்ரல் 02 ஆம் திகதி முதல் மாதமொன்றுக்கு ரூபா 125,000 வீதம் 21 மாதங்களுக்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 2,625,000 தொகை செலுத்தப்பட்டிருந்தன.

(இ) சர்வதேச ஆய்வு நிலையத்தை தாபிப்பதற்காக 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 18(2)(3)(ஊ) பிரிவின் பிரகாரம் உரிய அதிகாரிகளிடமிருந்து முறையான அங்கீகாரமொன்று பெற்றுக் கொள்ளாமல் பதவியணியனரைச் சேர்த்து சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 4,234,062 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், நிறுவனத்தின் கடமைகளை

நிறைவேற்றிக்கொள்வதற்கு தேவையான வழிகாட்டல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.8 ஆம் பிரிவின் பிரகாரம், பொறியியல் பீடத்தின் வாகனப் பராமரிப்பு பிரிவு மற்றும் வேலைப் பிரிவு என்பவற்றில் சேவை புரிகின்ற உத்தியோகத்தர்கள் / ஊழியர்களுக்காக கடமை பகிர்வு மேற்கொள்ளப்படாமல் இருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டிற்காக அப்பரிவுகளில் இணைக்கபட்டு சேவை புரிகின்ற உத்தியோகத்தர்கள் / ஊழியர்களுக்காக மொத்தம் ரூபா 18,020,276 தொகை சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தன.

(உ) நிதிப் பிரமாணம் 71 இன் பிரகாரம் குறித்த பதவியணிக்குரிய சம்பளம் செலுத்தப்படுவதற்கான நிதிஏற்பாடு அல்லது நிதியத்தின் மூலங்கள் எவையாக இருந்த போதிலும், பதவியணியினருக்குரிய சம்பளக் கொடுப்பனவிற்காக திறைசேரியின் பிரதிச் செயலாளரின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். தகவல் தொழிநுட்ப நிலையத்திற்காக பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்ளாமல் 04 பதவிகளில் 06 உத்தியோகத்தர்களுக்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 1,474,347 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தன.

(ஊ) பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர சேவையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 69 ஆக இருந்த போதிலும், உள்ளவாறான பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 63 ஆகவும் தனியார் பாதுகாப்பு சேவை மூலம் 117 பாதுகாப்பு உத்தியோகத்தர்களுமாக 180 பாதுகாப்பு காப்பாளர்கள் மற்றும் பாதுகாப்பு பரிசோதகர்களுமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியனரை விஞ்சி 111 பேர் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(எ) 2003 யூன் 01 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம், பதவியணியிரை முகாமை செய்யும் போது வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், மருத்துவ பீடத்திற்குரிய கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியில் முறையே 45 மற்றும் 26 வெற்றிடங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம், கூட்டிணைந்த திட்டத்தில் பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபை உத்தியோகத்தர்களாலும் சிரேஷ்ட முகாமையாளர்களினாலும் பல்கலைக்கழகம் தொடர்பான எதிர்கால நோக்கத்திற்காக தயாரிக்கப்பட்ட பிரதிபிம்பமாக இருக்க வேண்டிய போதிலும், பின்வரும் குறைபாடுகளினால் கூட்டிணைந்த திட்டத்தில் அவ்வாறான நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(i) வருடாந்த பாதீட்டுடன் நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒவ்வொரு நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது 15 நாட்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டின்

நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் 2013 யூலை 02 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) கூட்டிணைந்த திட்டத்துடன் பாதிடப்பட்ட மூலதனச் செலவினம் வருடாந்த பாதீட்டுடன் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 396,025,000 தொகையான 04 மூலதனச் செலவினங்கள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பிரிவின் பிரகாரம், தகவல் தொழிநுட்ப நிலையத்திற்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்படாமல் இருந்ததுடன், கூட்டிணைந்த திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளக் கூடிய வகையில் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது செயல் நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 83,550,000 கூட்டுத்தொகையான 32 விடயங்கள் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களுடன் அந்நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய கூட்டிணைந்த திட்டத்தினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் 31 விடயங்களுக்குரிய ரூபா 211,850,000 கூட்டுத்தொகை பெறுமதியிலான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 5.3 நிர்வாக சபைக் கூட்டங்கள்

மீளாய்வாண்டில் 11 தடவை நிர்வாக சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்த போதிலும், 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 4.2.2 ஆம் பிரிவின் பிரகாரம், செயற்திறனை மதிப்பிடுதல் மற்றும் வழிகாட்டுதல் என்பவற்றிற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் மற்றும் தகவல்கள் என்பன நிர்வாக சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 உள்ளகக் கணக்காய்வு

நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம், பல்கலைக்கழகத்தின் அந்தந்த பிரிவுகளில் வெவ்வேறாக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், தகவல் தொழிநுட்ப நிலையம் ஆரம்பிக்கப்பட்ட 2004 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வு திகதியான 2014 சனவரி 08 ஆம் திகதி வரையில் எந்தவொரு கணக்காய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.5 கொள்வனவுத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக வேலைகள், வழங்கல் மற்றும் சேவைகளுக்காக பிரதான கொள்வனவுத் திட்டத்தில் பெறுமதி உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், வருடாந்த பாதீட்டுடன் ரூபா 4,344,861,500 கூட்டுத்தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் பாதீட்டின் மூலம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிராத 18,317,000 பெறுமதியான கட்டமைப்பு ரீதியான 03 சேவைகள் அவதானிக்கப்பட்டன.

## 5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக தொலைக்கல்வி மற்றும் தொடர் கல்வி நிலையத்தின் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் என்பன முறையே ரூபா 57,955,000 மற்றும் ரூபா 26,527,000 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினம் என்பன முறையே ரூபா 66,341,099 மற்றும் ரூபா 65,538,406 ஆகவும் இருந்தன. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் என்பவற்றின் மிகை என்பன முறையே ரூபா 8,386,356 மற்றும் ரூபா 39,011,406 அல்லது முறையே 14 சதவீதத்தாலும் 147 சதவீதத்தாலும் விஞ்சியிருந்தன.

(ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 5.2.5 இன் பிரகாரம், வருடாந்த பாதீடு, கூட்டிணைந்த திட்டத்தின் அறிக்கையின் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு கருவியாக பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், கீழே காட்டப்பட்டுள்ள வேறுபாடுகளினால் பாதீடு சிறந்த நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) 37 செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட நிதிஏற்பாடுகளின் மிகைகளின் கூட்டுத்தொகை ரூபா 354,137,482 ஆக இருந்ததுடன், 29 செலவின விடயங்களில் மிகை மதிப்பீடுகளின் கூட்டுத்தொகை ரூபா 348,673,163 ஆக இருந்தது.

(ii) பாதீட்டில் உள்ளடக்கப்படாத 06 செலவின விடயங்களுக்குரிய ரூபா 155,504,977 கூட்டுத்தொகையான செலவினம் மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்தன.

(iii) செலவின விடயங்களின் கீழ் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 05 செலவின விடயங்களுக்காக 100 சதவீதமான ரூபா 702,000 பெறுமதியான ஏற்பாடுகள் மீளாய்வாண்டின் போது சேமிக்கப்பட்டிருந்தன.

(iv) பாதிடப்பட்ட வருமானத்தை உள்ளவாறான வருமானத்துடன் ஒப்பிட்ட போது 04 செலவின விடயங்களுக்குரிய ரூபா 54,503,907 ஆன பற்றாக்குறை வருமானம் அவதானிக்கப்பட்டது.

(v) பாதிடப்பட்ட வருமானத்தை உள்ளவாறான வருமானத்துடன் ஒப்பிடுகையில் 11 வருமான மூலங்களுக்குரிய ரூபா 133,334,989 தொகையான மிகை வருமானம் அவதானிக்கப்பட்டது.

(vi) பாதிடப்பட்ட வருமானமாக இனங்காணப்படாத 03 வருமான மூலங்களின் கீழ் ரூபா 91,439,412 ஆன வருமானம் மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்றிருந்தன.

(vii) பாதிடப்பட்ட தகவல்களின் பிரகாரம் 04 வரவு விடயங்களுக்காக ரூபா 58,955,000 கூட்டுத்தொகையான வருமானம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அந்த வருமான விடயங்களுக்காக வருமானம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) M.Phill மற்றும் PHD பட்டப்படிப்பு அபேட்சகர்களுக்கு வெளிநாட்டு நிறுவனங்களில் பட்டப்படிப்பு பாடநெறிகளை பின்பற்றுவதற்காக தேவையான நிதியை வழங்குவதற்காக ரூபா 10 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு நபருக்கும் அந்நடவடிக்கைகளுக்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 5.2.1 இன் பிரகாரம், பாதிடப்பட்ட ஐந்தொகையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டிற்காக பாதிடப்பட்ட ஐந்தொகையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) முற்பண மீதிகளை தீர்வு செய்தல்
(இ) இருப்புக் கட்டுப்பாடு
(ஈ) வாகன நிர்வாகம்
(உ) ஆய்வு மானியங்கள் மற்றும் நிதியப் பயன்பாடு
(ஊ) பதவியணியினர் நிர்வாகம்
(எ) கொள்வனவுச் செயற்பாடுகள்
(ஏ) ஊழியர் கடன் நிர்வாகம்
(ஐ) ஒப்பந்த நிர்வாகம்